செய்தி வெளியீடு எண். 17-2017 நாள்: 08.08.2017

# விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் வட்டம் அழகன்குப்பம் கிராமத்தில், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மீனவர்களுக்கான மாபெரும் படகுப் போட்டியினை மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

*****

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் வட்டம் அழகன்குப்பம் கிராமத்தில், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இன்று (08.08.2017) நடைபெற்ற மீனவர்களுக்கான மாபெரும் படகுப் போட்டியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (08.08.2017) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

விழுப்புரம் மாவட்டத்தில் 09.08.2017 அன்று பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நடைபெற உள்ளது. இவ்விழாவினை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் திண்டிவனத்தில் மாபெரும் இரத்ததானம் முகாம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து, மாபெரும் படகுப்போட்டி நடைபெற்றது. இதில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த திரைப்படங்களின் பெயர்களை குழுப்பெயராக கொண்டு 10 குழுக்கள் கலந்து கொண்டன. இப்போட்டியில் என் அண்ணன் குழு முதல் பரிசும், குடும்பத் தலைவன் குழு இரண்டாம் பரிசும், இதயக்கனி குழு மூன்றாம் பரிசும், மாட்டுக்கார வேலன் மற்றும் உலகம் சுற்றும் வாலிபன் ஆகிய குழுக்கள் ஆறுதல் பரிசுகளையும் பெற்றன. முதல் பரிசாக ரூ.15,000/-மும், இரண்டாம் பரிசாக ரூ.10,000/-மும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/-மும், ஆறுதல் பரிசாக 2 குழுக்களுக்கு தலா ரூ.2,000/-மும் வழங்கப்பட்டது.

இவ்விழாவில், மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் பரிசுகளை வழங்கி பேசியதாவது:

மீனவர்களுக்கு மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு எண்ணற்ற பல நன்மைகளை செய்து வருகிறது. மீன்பிடி தடைக்காலத்தில் ஒவ்வொரு மீனவருக்கும் இழப்பீட்டுத்தொகையாக, ரூ.5,000/- வழங்கப்படுகிறது. தேசிய மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கு நிவாரண நிதியாக ரூ.4,500/-மும், மீன்பிடி குறைவு காலங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கு ரூ.5,000/-மும் வழங்கப்படுகிறது. மீனவர்களுக்கென 5,000க்கும் மேற்பட்ட வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்கு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் விபத்து நிவாரணத்தொகையும் வழங்கப்படுகிறது. மரக்காணத்தில் துறைமுகம் அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் மீனவர்கள் நலனுக்கென மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களை தீட்டிச் செயல்படுத்தி வருகிறது என மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ரா.பிரியா, திண்டிவனம் சார் ஆட்சியர் திரு.பிரபுசங்கர்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சிம்டன்ஜீத் சிங் கஹ்லான்,இ.ஆ.ப., ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை, வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி, இணை இயக்குநர் (மீன்வளர்ச்சி) திரு.கார்த்திகேயன், உதவி இயக்குநர் திருமதி.மணிமேகலை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.